பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

07 04 2025 **MONDAY** **6.30 PM**

<u>மாநிலச் செய்திகள்</u>
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பெட்ரோல், டீசல் மீதான கலால் வரி உயர்வு நுகர்வோரை பாதிக்காது என்று மத்திய அரசு கூறியுள்ளது.

2. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முக்கிய பங்கு வகிப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

3. குடிசைத்தொழில் மற்றும் பசுமைத் தொழில் கட்டிடங்களுக்கு உடனடி அனுமதி பெறும் வகையில் சுய சான்றிதழ் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று தமிழக அரசு கூறியுள்ளது.

4. வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. **Havirov** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Payas Jain - Yashaswini Ghorpade** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<>>>>>>**

பெட்ரோல் மற்றும் டீசல் மீதான கலால் வரி உயர்வு நுகர்வோரை பாதிக்காது என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி, பெட்ரோல் மற்றும் டீசல் மீதான கலால் வரி 2 ரூபாய் உயர்த்தப்படுவதாக நிதியமைச்சகம் அறிவிக்கை வெளியிட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட மாட்டாது என்று எண்ணெய் நிறுவனங்கள் உறுதியளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

சமையல் எரிவாயு விலை சிலிண்டருக்கு 50 ரூபாய் உயர்த்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்த விலை உயர்வு நாளை முதல் அமலுக்கு வரும் என்றும் திரு ஹர்தீப் சிங் பூரி கூறினார்.

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முக்கிய பங்கு வகிப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல்.முருகன் கூறியுள்ளார்.

சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள மீனாட்சி மகளிர் கல்லூரியின் பொன்விழா ஆண்டு கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

*(சவுண்ட் பைட் – எல். முருகன் – 62 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>>

சென்னை, செங்கல்பட்டு, கோவை, மதுரை, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய மண்டலங்களில் உள்ள எட்டு கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம், நகைக்கடன் வழங்கப்படும் என்று வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு முத்துசாமி கூறியுள்ளார்.

இன்று பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசுகையில் இதற்கான அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

குடிசைத்தொழில் மற்றும் பசுமைத் தொழில் கட்டிடங்களுக்கு உடனடி அனுமதி பெறும் வகையில் சுய சான்றிதழ் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்றும் திரு முத்துசாமி கூறினார்.

<<<<<>>>>>>

சென்னையில் 45 கோடி ரூபாய் செலவில் ஏழு பன்னோக்கு மையங்கள் அமைக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு சேகர்பாபு கூறியுள்ளார்.

இன்று பேரவையில் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தின் மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

சென்னை குரோம்பேட்டையில் பத்து கோடி ரூபாய் செலவில் நடைமேம்பாலம் அமைக்கப்படும், குன்றத்தூர் ஒன்றியத்தில் கட்டமைப்பு வசதிகள் 21 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும், கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம் பத்து கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளையும் அமைச்சர் வெளியிட்டார்.

<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இலங்கையில் மேற்கொண்ட பயணம் வரலாற்று சிறப்பு மிக்கது என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

சென்னையை அடுத்த பொத்தேரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக மீனவர் பிரச்சினை குறித்தும் இந்த பயணத்தின்போது அந்நாட்டு அதிபரிடம் பிரதமர் பேசியதாகவும் கூறினார்.

இதன்காரணமாகத்தான் 14 மீனவர்கள் விடுவிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை சிறையில் உள்ள எஞ்சிய மீனவர்களும் விரைவில் விடுக்கப்படுவார்கள் என்று தாம் நம்புவதாகவும் திரு அண்ணாமலை கூறினார்.

<<<<<>>>>>>

டாஸ்மாக் ஊழல் பற்றி விவாதிக்க திமுக அரசு அஞ்சுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த பிரச்சினை தொடர்பான வழக்கினை சென்னை உயர்நீதிமன்றத்தில் இருந்து பிற மாநிலங்களுக்கு மாற்றுமாறு உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு கோரிக்கை விடுத்துள்ளது ஏன் என்று வினவினார்.

இதற்கிடையே, வழக்கினை உச்சநீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்றுதான் தமிழக அரசு கோரிக்கை விடுத்துள்ளதாக சட்ட அமைச்சர் திரு ரகுபதி கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், டாஸ்மாக் தொடர்பான அனைத்து வழக்குகளையும் ஒன்றாக சேர்த்து உச்சநீதிமன்றத்தில் விசாரிக்குமாறு கோரிக்கை வைக்கப்பட்டதாக தெரிவித்தார்.

டாஸ்மாக்கில் எந்த முறைகேடும் நடைபெறவில்லை என்பதை நீதிமன்றத்தில் தங்களால் நிரூபிக்க இயலும் என்றும் திரு ரகுபதி தெரிவித்தார்.

<<<<<>>>>>

மாற்றுத்திறன் கொண்ட சிறுவர்களுக்கான பூங்கா கோவையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனத்தின் நிதி பங்களிப்போடு கோவை மாநகராட்சி இந்த பூங்காவை ஏற்படுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - ஹரிஹரன் - 45 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திருமதி அமுதா கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - அமுதா – 61 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருப்பத்தூர் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி சிவ சௌந்தரவல்லி அறிவுறுத்தியுள்ளார்.

----------------

விவசாயிகளுக்கான நலத்திட்ட உதவிகளை பெறுவதற்காக வேலூர் மாவட்டத்தில் இதுவரை 46 ஆயிரம் பேர் பதிவு செய்துள்ளனர்.

-----------------

தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் இருந்து 2 ஆயிரத்து 500 டன் அரிசி சேலம் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

---------------

தேனி மாவட்டம் கும்பக்கரை அருவியில் மூன்று நாட்களுக்கு பிறகு சுற்றுலாப்பயணிகள் குளிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

------------

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்துவரும் மழை காரணமாக நெல்லை மாவட்டம் களக்காடு தலையணையில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக சுற்றுலாப்பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

--------------

ஈரோடு மாவட்டம் நம்பியூரில் சூறாவளி காற்று காரணமாக 15-க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Havirov** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Payas Jain - Yashaswini Ghorpade** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 16-18, 11-9, 15-17, 11-9, 11-8 என்ற செட் கணக்கில், செக் குடியரசின் **Jan Valenta – Zdena Blaskova** இணையை வென்றது.

------------------

இத்தாலியில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் வெற்றிபெற்றார்.

-------------

பிரேசிலில் நடைபெற்ற உலக குத்துச்சண்டைபோட்டியில் ஒரு தங்கம் உட்பட 6 பதக்கங்களை வென்ற இந்திய அணிக்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா பாராட்டு தெரிவித்துள்ளார்.

<<<<<END>>>>>>